# திருமலைத்தீபம்

Thirumalaitheepam

தீபம் – 73 | July - 2021 | Email : theepamlink@gmail.com | TP: 026 2221022/ 026 2054362 | Rs. 30/=


## திருகோணமலை எகெட் கரித்தாஸ் நிறுவனத்திற்கான புதிய கட்டடம்

### திருகோணமலை பேராலய வீதியில் 16 யூலை 2021 அன்று பேரருட்திரு. கி.நோயல் இம்மானுவேல் ஆண்டகையால் திறந்துவைப்பு



எகெட் கரித்தாஸ் நிறுவனத்தின் புதிய கட்டட திறப்பு விழாவானது மறைமாநில ஆயர் பேரருட்திரு கலாநிதி கிறிஸ்டியன் நோயல் இம்மானுவேல் ஆண்டகை அவர்களின் ஆசீருடனும், மறைமாநில குருமுதல்வர், மரியாள் பேராலயப் பங்குத்தந்தை, அருட்பணியாளர்கள், மற்றும் பணிப்பாளர் பணியாளர்கள் பயனாளிகளுடன் 2021.07.16 அன்று தமிழ் முறைப்படி பால்காய்ச்சி, செபவழிபாட்டுடன் திறந்து வைக்கப்பட்டது.



அதன் பின்னர், கரித்தாஸ் நிறுவனத்திற்கான வலைத்தளம் www.caritasehed.com எனும் பெயரிலும், எகெட் கரித்தாஸ் நிறுவனத்தின் புலமைப்பரிசில் திட்டம் "அணையா தீபம் / Ignite Wisdom" எனும் பெயரிலும் ஆரம்பிக்கப்பட்டதுடன், உணவுப் பாதுகாப்புத்திட்டத்தின் கீழ் தனது வீட்டிலும் பாடசாலையிலும் இயற்கை முறையில் வீட்டுத்தோட்டத்தினைத் திறம்படச் செய்யும் நிலாவெளியைச் சேர்ந்த பாடசாலை மாணவனும், சமய நல்லிணக்கத் திட்டத்தின் (AMITY) கீழ் நடாத்தப்பட்ட சித்திரப் போட்டியில் பங்குபற்றி மூன்று வயதுப்பரிவுகளிலும் முதலிடங்களைப் பெற்ற மாணவர்களும், Grace Construction உரிமையாளர் மற்றும் மேற்பார்வையாளர், எகெட் கரித்தாஸ் நிறுவனத்தின் தொழில்நுட்ப உத்தியோகத்தர் ஆகியோரும் கௌரவிக்கப்பட்டனர். சிறப்பாக Misereor வாழ்வாதார உதவித்திட்டத்தின் கீழ் பயனாளியொருவருக்கும் வாழ்வாதார உதவிகள் ஆயர் அவர்களினால் வழங்கி வைக்கப்பட்டது.










திருகோணமலைமறைமாவட்டத்தின் ஏற்பாட்டில்

## 'நம்பிக்கைப் பயணம்'

விபரம் 12ம் பக்கத்தில்...

## ஆயர்த்துவ திருநிலைப்படுத்தலின் 6 ஆண்டுகள் நிறைவு

திருகோணமலை ஆயர் பேரருட்திரு. கிறிஸ்டியன் நோயல் இம்மானுவேல் ஆண்டகை அவர்கள் 25-07-2021 அன்று ஆயராக திருநிலைப்படுத்தப்பட்டதன் 6வது ஆண்டு நிறைவைக் கொண்டாடுகின்றார். ஆயர் அவர்களின் பணி சிறக்க தொடர்ந்து மறைமாவட்டத் திருஅவையாக இணைந்து வாழ்த்துவதோடு செபிப்போம்.



### எம் மறைமாவட்டத்தின் பாதுகாவலர்
### புனித லொயோலா இஞ்ஞாசியாரின் திருவிழா – யூலை 31

எம் மறைமாவட்ட பாதுகாவலர் புனித லொயோலா இஞ்ஞாசியாரின் திருவிழாவினை இம்மாதம் 31ம் திகதி கொண்டாடும் நாம் மறைமாவட்டத்தின் ஆயர், குருக்கள், துறவிகள், இறைமக்கள் அனைவருக்கும் எம் வாழ்த்துக்களைத் தெரிவிக்கும் அதேவேளை, இயேசு சபைத் துறவிகளையும் மகிழ்வோடு நினைவு கூர்ந்து விசேட வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றோம். எம் மறைமாவட்டத்தில் நீண்ட காலமாக சமய, சமூக பணிகளை மேற்கொண்டு வரும் இயேசு சபையின் துறவிகள் எமக்கு கிடைத்த ஆசீர்வாதம். தங்கள் சபையின் ஸ்தாபகரின் விழாவினைக் கொண்டாடும் இவர்கள் பணி தொடர்ந்து சிறக்க எம் செபங்களோடு கூடிய வாழ்த்தை மீண்டும் தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகின்றோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்வு சார்ந்த வழிபாடு – 8

அருட்பணி. அலெக்சாண்டர்
TNBCLC திண்டிவனம்

## திருவழிபாட்டில் அடையாளங்கள்

அடையாளங்கள், குறியீடுகள், சின்னங்கள், சைகைகள் மற்றும் உடல் நிலைகள் மனிதரின் அன்றாட வாழ்வோடு பின்னிப் பிணைந்தவை. பிரிக்கவே முடியாதவை. இயேசுவும் அடையாளங்களைப் பயன்படுத்தியே இறையாட்சியை பரப்பினார். வார்த்தை அடையாளங்கள் என்று பார்த்தால் அவர் சொன்ன உவமைகள், உருவகங்கள் இருக்கின்றன. புலப்படுத்துகின்ற / உடல் ரீதியான / செயல் சார்ந்த (Physical Signs and Symbols) அடையாளங்கள் என்கிற வகையில் தண்ணீரில் திருமுழுக்கு, புதுமைகள், தொட்டு நலமளித்தல், கோவிலைத் தூய்மையாக்குதல், சீசரின் நாணயம், அப்பம், திராட்சை இரசம், மீன், பிடுதல், காலடிமண் தட்ட சொல்லுதல்........ என ஏராளமான அடையாளங்கள் இருக்கின்றன. இப்படி அடையாளங்கள் வழியாக மனிதருடன் உறவு கொண்ட கிறிஸ்து, உயிர்ப்புக்குப் பின் தனது திருஅவை வழியாக அடையாளங்கள் மூலமாக நெருக்கமாக உணரப்படுகிறார். ஏனெனில், வார்த்தைகளால் விவரிக்க முடியாத இறை நம்பிக்கையின் வெளிப்பாட்டை அடையாளங்களால் எளிதாக எட்ட முடிகிறது. அதனால் தான், புலனாகும் பொருட்களை ஆன்மீகத்துடன் ஒருங்கிணைத்து வழிபாட்டில் பயன்படுத்துகின்றோம்.

திருஅவை சட்டம் 8341ல் திருஅவையின் புனிதப்படுத்தும் பணியை விளக்கும் போது இவ்வாறு குறிப்பிடுகின்றது. "திரு அவை தனது புனிதப்படுத்தும் பணியைத் திருவழிபாட்டின் வழியாகச் சிறப்பான முறையில் நிறைவேற்றுகிறது. திருவழிபாடு... அதில் புலன்களால் உணரக் கூடிய அடையாளங்களால் மனிதரின் புனிதப்படுத்தல் குறித்து காட்டப்பட்டு, ஒவ்வோர் அருளடையாளத்திற்கும் உரிய முறையில் விளைவிக்கப்படுகிறது...." புலன்களால் உணரக்கூடிய அடையாளங்கள் மேன்மையான அர்த்தங்களை உள்ளடக்கியுள்ளன. இதனையே இரண்டாம் வத்திக்கான் சங்க ஏடு, திருவழிபாடு எண் 33 விளக்குகிறது. "...கட்புலனாகாப் பொருட்களைக் குறித்துக் காட்டுவதற்கென்று திருவழிபாடு பயன்படுத்தும் கட்புலனாகும் அடையாளங்கள் கிறிஸ்துவில் அல்லது திரு அவையால் தெரிந்தெடுக்கப்பட்டிருக்கின்றன.

திருஅவை கடவுளை நோக்கி வேண்டும் போதும், பாடும் போதும், செலாற்றும் போதும் இவற்றில் பங்கு கொள்வோரின் நம்பிக்கை ஊட்டம் பெறுகின்றது. கடவுளுக்குப் பகுத்தறிவுக்கு உகந்த பணிவு காட்டவும் அவரது அருளை இன்னும் தாராளமாய்ப் பெற்றுக் கொள்ளவும் கடவுள் மீது இவர்களின் உள்ளங்கள் தட்டி எழுப்பப்படுகின்றன" எனவே திருவழிபாட்டில் உள்ள அனைத்து அடையாளங்களும் நுணுக்கமாக ஆராய்ந்து தேர்ந்தெடுக்கப்பட்டவை. எதுவும் தற்செயலாகவோ, யதேச்சையாகவோ, வெறுமனே அழகூட்டவோ, மெருகூட்டவோ பயன்படுவதில்லை. ஒவ்வொரு அடையாளமும் உயர்ந்த, உன்னதமான அர்த்தங்கள் பொதிந்தவை.
காலம், இடம் மற்றும் புலன்களுக்கு அப்பாற்பட்ட கடவுள் மனிதராக மனுவுடலேற்றல் (INCARNATION) அவசியமானது போல, மேன்மையான, புலன்களுக்கு அப்பாற்பட்ட மறைபொருள்கள், மனித வாழ்வோடு தொடர்பு கொள்ள அடையாளங்கள் அவசியமாகின்றன. வழிபாட்டில் புலப்படும் அடையாளம் குறித்துக் காட்டுகிற மறைபொருளோடு எளிதில் இணைத்துப் பாரக்க, தொடர்பு கொள்ள நம்பிக்கையாளர்களால் முடிகிறது. கிறிஸ்துவ நம்பிக்கையின் மையமான இயேசுவின் பாடுகள், மரணம், உயிர்ப்பு என்னும் மீட்பின் மறைபொருள் நடந்து முடிந்த இறந்த காலமாய் இல்லாமல், ஒவ்வொரு முறையும் இன்றளவும், என்றென்றும் அடையாளங்கள் வழியாக நிகழ்காலமாய் நிலைக்கிறது. இப்படிப்பட்ட அடையாளங்கள் இறைவனோடு உண்மையான உறவுகொள்ள வழியாய் இருக்கின்றன.

கத்தோலிக்கத் திரு அவையின் மறைக்கல்வி CCC. 1145 இவ்வாறு விவரிக்கிறது. "திருவழிபாட்டுக் கொண்டாட்டம் அறிகுறிகளோடும், அடையாளங்களோடும் பின்னிப் பிணைந்துள்ளது. இவற்றின் பொருள் படைப்பிலும், மனிதப் பண்பாட்டிலும் வேரூன்றி உள்ளது. இது பழைய ஏற்பாட்டு நிகழ்வுகளால் தீர்மானிக்கப்பட்டது. கிறிஸ்து என்ற ஆளிலும் அவரது பணியிலும் முழுமையாக வெளிப்படுத்தப்பட்டுள்ளது". எனவே, புலப்படக்கூடிய / உணரக்கூடிய பொருட்கள் வழியாக கடவுளின் புனிதப்படுத்தும் செயல் மனிதரை சென்றடைய வழியாய் இருக்கிறது. அதேபோல, புலன்களுக்கப்பாற்பட்ட இறைவனை வழிபட மனிதர்களுக்கு உதவியாய் அருளடையாளங்கள் இருக்கின்றன. இந்த அடையாளங்களை இயற்கையான அடையாளங்கள், சமூக மற்றும் கலாச்சார அடையாளங்கள், தனிப்பட்ட அடையாளங்கள் என மூன்றாகப் பிரிக்கலாம். இயற்கையிலிருந்து பெறப்படும் அடையாளங்களின் வழியாய் படைத்த இறைவனை மனிதர் உணரமுடியும்.எ.கா:- ஒளி & இருள், காற்று & நெருப்பு, நீர் & நிலம், மரம் & கனி. அடையாளத்திற்கும், அடையாளப்படுத்தப் படுவதற்குமான இயற்கையான தொடர்பின் வழியாகவும் இதனை அறியலாம். எ.கா :- புகை & நெருப்பு
சமூக மற்றும் கலாச்சார அடையாளங்கள் வேறுபடக்கூடியவை. ஒரு நாட்டில், கலாச்சாரத்தில், சமூகத்தில் அல்லது பண்பாட்டில் ஒரு சில பொருட்கள், செயல்கள், சைகைகள் அவர்களுக்கு மட்டுமே புரியக்கூடிய அர்த்தங்களைக் கொண்ட அடையாளங்களாய் இருக்கும். எ.கா:- நாட்டின் கொடி, சின்னங்கள், ஒளியேற்றுதல் (குத்து விளக்கு) பொன்னாடை அணிவித்தல்.... மற்ற கலாச்சார, சமூகப் பின்புலம் கொண்டவருக்கு இவை வித்தியாசமாகத் தோன்றும் மூன்றாவதாக, தனிப்பட்ட அடையாளங்கள் என்பவை ஒவ்வொரு தனிநபரின் எண்ணங்களை, உணர்வுகளை வெளிப்படுத்த உதவுகின்றன. எ.கா:- உடுத்துதல், உடல்நிலைகள், பிறருடன் நடந்து கொள்ளும் விதம். இப்படி மூன்று வகையான அடையாளங்களும் திருவழிபாட்டில் பயன்படுத்தப்படுகின்றன.

இதனையே கத்தோலிக்க திரு அவையின் மறைக்கல்வி CCC.1189 குறிப்பிடும்போது, "திருவழிபாட்டுக் கொண்டாட்டங்கள் குறியீடுகளையும், அடையாளங்களையும் பயன்படுத்துகின்றன. சில அடையாளங்கள் (ஒளி, நீர், நெருப்பு, அப்பம், இரசம், எண்ணெய்) படைக்கப்பட்ட பொருள்களிலிருந்தும், வேறு சில ( கழுவுதல், பூசுதல், அப்பம் பிடுதல்) சமூக வாழ்விலிருந்தும் எடுக்கப்பட்டவை. இன்னும் சில பழைய ஏற்பாட்டு (பாஸ்காச் சடங்குகள், பலிகள், கைகளை வைத்தல், திருநிலைப்பாடு) மீட்பு வரலாற்றிலிருந்தும் எடுக்கப்பட்டவை. இவ்வடையாளங்களுள் சிலவற்றை கிறிஸ்துவே பயன்படுத்தியிருந்தால் இவை தீர்மானிக்கப்பட்ட வையாகவும், மாற்ற முடியாதவையாகவும் உள்ளன. அவருடைய மீட்பளிக்கம் செயலையும், புனிதப்படுத்தும் செயலையும் கொண்டு வருபவையாக உள்ளன" என்று விளக்குகிறது. எனவே திருவழிபாட்டில் படைக்கப்பட்ட பொருள்கள், சமூக வாழ்வின் அடையாளங்கள், கிறிஸ்துவின் தனிப்பட்ட அடையாளங்கள் வழியாய் கடவுள் நம்மோடு உறவுகொள்ள வருகின்றார். நமது பங்கிற்கு நாமும் இந்த அடையாளங்களை முழுமையாய் அர்த்தம் உணர்ந்து, புரிந்து, செயல்நிலையில் திருவழிபாட்டில் பங்கேற்கும் போது இறை - மனித உறவு ஆழப்படுகிறது. ஆகவே, அடிப்படையில் நாம் உணர்ந்திருக்க வேண்டிய உண்மை என்னவெனில், திருவழிபாட்டில் ஒவ்வொன்றும் ஆழ்ந்த அர்த்தங்கள் கொண்டிருக்கின்றன. எதையும் அலட்சியமாக கடந்து சென்றுவிட முடியாது.

திருவழிபாட்டில் நாம் காணும் எழுத்துக்கள் & குறியீடுகள், இடங்கள், பொருட்கள், நிறங்கள், கடைப்பிடிக்கும் செயல்கள், இருக்கும் உடல் நிலைகள், செய்யும் சைகைகள் அனைத்தையும் கூர்ந்து நோக்க வேண்டியிருக்கிறது. இவற்றில் முழுமையான அர்த்தம் உணர்ந்து கொள்ள நம்பிக்கயைாளர்களாகிய நமக்கு மறுகல்வி (Re-education) அத்தியவசியமாகிறது.

முதலில், திருவழிபாடடில் நாம் காணும் எழுத்துக்கள் மற்றும் குறியீடுகளைப் பற்றி விளக்கமாகக் காணலாம். பெரும்பாலான எழுத்துக்கள் 'சுருக்க முதலெழுத்திணைப்பு வடிவம்' (Monogram) என்ற முறையில் தான் வருகின்றன.

IHS- இதனை நிறைய இடங்களில் நாம் காணலாம். 'இயேசு' என்ற பெயரின் கிரேக்க வார்த்தைக்கான சுருக்கமேயாகும். இதன் முதல் மூன்று கிரேக்க எழுத்துக்கள் lota - eta - sigma இணைந்து சுருக்கமாக IHS என்றானது. இதற்கு நாளடைவில் லத்தீன் விரிவாக்கமும் கொடுத்து பொருள் கொள்ளப்பட்டது.

IHS - Iesus Hominum salvator அதாவது, இயேசு - மனிதரின் மீட்பர் என்றும். IHS In Hoc Signo Vinces - அதாவது இந்த சின்னத்தின் வழியாய் வெற்றியடைவாய் என்றும் பொருள் விளங்கப்பட்டது. இருப்பினும், IHS குறித்துக்காட்டுவது 'இயேசு' என்கிற பெயரையே
பிலி 2:10 "இயேசுவின் பெயருக்கு விண்ணவர், மண்ணவர், கீழுலகோர் அனைவரும் மண்டியிடுவர்." 'இயேசு' என்ற பெயருக்கு 'நம்மை மீட்கிறவர்' என்பது பொருள், இந்த வல்லமையான பெயரையே குறியீடாக பயன்படுத்துகிறோம். "ஏனென்றால், நாம் மீட்புப் பெறுமாறு வானத்தின் கீழ் மனிதரிடையே இவரது பெயரின்றி வேறு எந்தப் பெயரும் கொடுக்கப்படவில்லை." (தி.பணி 4:12) இந்தச் சுருக்கெழுத்துக் குறியீட்டை (IHS) அப்பத்தில், அருள்பணியாளரின் திருஉடையில், பீடத்தின் துணிகளில், ஆலயத்தின் பல்வேறு பகுதிகளில் நாம் காணலாம். ஏனெனில், இயேசுவின் பெயரைச் சொல்லி அழைப்போர் மீட்படைவர் (உரோ 10:13) மன்றாடுவது அருளப்படும் (யோவா 14:13) தீமைகள் விலகி ஓடும் (லூக் 10:17), புதுமைகள் நடக்கும் (தி.பணி 4:30), புனிதமடைவோம் (1கொரி 6:11) என நீண்டு கொண்டே போகிறது இந்தப் பெயரின் வல்லமை.
இயேசுவின் பெயரை இன்னும் ஒரு சில விதங்களில் குறியீட்டு சுருக்கமாக காணலாம்.

IX அடையாளம் :- இது 'இயேசு கிறிஸ்து' என்பதன் கிரேக்க வார்த்தைகளின் முதல் எழுத்துக்கள்.



(l-lota,X-Chi) பொதுவாக இந்த இரண்டு எழுத்துக்களையும் ஒன்றின் மீது ஒன்றாக எழுதுவர்.

CHI - RHO அடையாளம் :- கிறிஸ்து என்பதன் கிரேக்க வார்த்தையின் முதல் இரண்டு எழுத்துக்கள்.



X - Chi & P-Rho ஒன்றின் மீது ஒன்றாக எழுதுவர்.

தொடரும்....-

"கடவுள் உங்களோடு பேசுவதற்கு முயற்சிக்கிறார். கூர்ந்து கேட்கப் பழகுங்கள்"
(புனித லொயோலா இஞ்ஞாசியார்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஒன்றுமே இல்லாதவர்கள் யாரும் இல்லை

வணக்கம் வாசகர்களே,

கொரோனா தந்த இடைவெளியில்
மூன்று மாதங்கள் கரைந்துபோய்விட்டன.
"கரைந்தது மாதங்கள் மட்டுமல்ல
அந்த மாதங்களின் நாட்களுக்கும்
அடுத்து வந்த மாதங்களின் நாட்களுக்கும் சேர்த்து
நாம் போட்டுவைத்திருந்த திட்டங்களும்,
சேர்த்து வைத்திருந்த முதலீடுகளும்,
நம் எதிர்கால வாழ்க்கைக்கான நம்பிக்கைகளும் தான்!" என்று
நீங்கள் உரைப்பது எல்லாருக்கும் கேட்கிறது.
"ஆம்" என்று எல்லோரும் ஒருசேர
ஆமோதித்து தலையாட்டுவதும் தெரிகிறது.
ஏனென்றால் கொரோனா வைரசின் பாதிப்பு
எம் ஒவ்வொருவரின் வீட்டினையும் தீண்டியுள்ளது.
இதனால் இன்று,
சிறிய பெட்டிக்கடைமுதல் பெரிய வணிக நிறுவனங்கள் வரை,
சிறிய வீட்டுத்தோட்டம் முதல் ஏக்கர்களில் வயல் விதைப்பவர்கள் வரை, கடையப்பம்
செய்பவர் முதல் 'கேட்டரிங்' செய்பவர் வரை
அனைத்து வகை மக்களின் நிலையும்
"வெறுமையே எங்களுக்கு எஞ்சியிருக்கிறது."
"இனி வாழ்விற்கு வழியாக ஒன்றுமில்லையே!"
"எப்படி மறுபடியும் வாழ்வைத் தொடங்கப்போகிறோம்!" என்பதுதான்!

அண்மையில் நான் படித்த கதையொன்று,
ஒரு பெரிய விருட்சத்தில் இருந்து விழுந்த பழத்தை
தன் மகனிடம் நீட்டி, 'இதில் என்ன இருக்கிறது பார்'
என்று சொன்னார், ஞானியான அவன் தந்தை.
அதை உரித்துப் பார்த்த மகன்,
அதில் ஏராளமான விதைகள் இருப்பதாகச் சொல்கிறான்.
அதில் ஏதாவது ஒரு விதையை
உடைத்துப்பார்க்கச் சொல்கிறார் தந்தை.
அவ்வாறே செய்த மகன்
அதில் எதுவுமே இல்லை என்று சொல்ல,
ஞானியான அவன் தந்தை,
'ஒன்றுமே இல்லாத ஒன்றில் இருந்துதான் விதை உருவானது.
அதில் இருந்து பழம் உருவானது. அதில் இருந்து மரம் உருவானது.
அதில் இருந்து பூ உருவானது. அதில் மீண்டும் பழம் உருவானது.
'ஒன்றுமே இல்லாத ஒன்றுதான் முடிவே இல்லாமல்
மரங்களையும் பூக்களையும் பழங்களையும்
விதைகளையும் உருவாக்கி வருகின்றன' என்றாராம்.
இக்கதை இவ்வுலகில்,
யாருமே ஒன்றுமே இல்லாதவர்கள் இல்லை என்று
உணர்த்துவதற்காக சொல்லப்பட்டது.



நீங்களும் ஒன்றும் இல்லாதவர்கள் அல்ல.
ஏதோ ஒன்று உங்களையும் உங்கள் குடும்பத்தையும் கட்டியெழுப்ப
உங்களிடம் மறைவான கொடையாக உள்ளது.
அதைக் கொண்டாட ஆரம்பியுங்கள்.
'இதுவும் கடந்து போகும்' என்ற வாக்கியத்தை
உங்கள் தாரக மந்திரமாக எடுத்துக்கொள்ளுங்கள்.

நீதிமொழிகள் நூலின் ஆசிரியருடைய வார்த்தைகளான,
"எனக்குச் செல்வம் வேண்டாம், வறுமையும் வேண்டாம்
எனக்குத் தேவையான உணவை மட்டும் தந்தருளும். (30,8)
என்பது இங்கு நினைவிற்கொள்ளத் தக்கது.



எங்கள் அன்றாட உணவை எங்களுக்குத்தாரும் என்று
தந்தையிடம் செபிக்கும் எம் அன்றாட தேவைகளை நிறைவேற்ற
நம் விண்ணகத் தந்தை உதவி செய்வார் என்ற நம்பிக்கையோடு
நம் முன் வரும் நாட்களை எதிர்கொள்வோம்.
மனச்சோர்வினையும், தளர்வினையும் வெற்றிகொள்வோம்,
புதிய பலத்தினைப் பெற்றுக்கொள்வோம்.
குறையா மகிழ்ச்சியில் நம் வாழ்வைக் கட்டியெழுப்புவோம் என ஆசி கூறி தீபத்தின் வழியாக
உங்களை வாழ்த்துகிறேன்.

ஆசிரியர்

## படித்ததில் பிடித்தது

### தனி மரம்



அறுபது வயது ஆலமரம்.
விழுதுகளை விட்டு உயர்ந்து வளர்ந்திருந்தது.
பக்கவாட்டில் பரந்து விரிந்த வளர்ச்சி.

அதன் அடியில்....
பெரிய பெரிய மரமாக வேண்டிய
சின்னச் சின்ன செடிகள்.
ஆலமரத்தின் நிழலை வாழ்த்தின:
"எவ்வளவு பெரிய மரம்...!
இந்த நல்ல மரமின்றி எங்களுக்கு நல்வாழ்வு இல்லை.
இம்மரமே எங்கள் முன் மாதிரி.
எவ்வளவு சுகமான வாழ்வு இது...!"

பெரியவர் ஒருவர் வந்தார்.
கொழு கொழுவென வளர்ந்திருந்த
சின்னச் சின்ன செடி மரங்களைப் பார்த்தார்.
மனமிரங்கினார்: "தள தளவென்ற இந்த வளர்ச்சி ஆரோக்கியமானதல்ல."
பிடுங்கி வேறொரு இடத்தில் நட்டு வளர்க்க முயன்றார்.

அலறின அறிவு கெட்ட சின்ன மரங்கள்:
"ஐயோ! எங்களைப் பிடுங்காதீர்கள்
இந்த ஆலமர நிழலின்றி வேறு வாழ்வை எங்களால்
யோசித்துக் கூட பார்க்க முடியாது.
வேறு இடத்தில் இப்படி கொழு கொழு வென வளர முடியுமா?
நாங்கள் நிழலுக்கு எங்கு போவோம்?"


பெரியவர் சொன்னார்:
"இந்த ஆலமரம் இல்லையென்றால்
உங்களுக்கு நிழல் கிடைக்காமல் போகலாம்.
ஆனால்... சூரிய ஒளி கிடைக்குமே...!
சூரிய ஒளி இல்லாமல் தான்
நீங்கள் இப்படி கொழு கொழு வென்று இருக்கிறீர்கள்.
இப்படியே போனால் உங்களால் வளர்ந்து கனி தர முடியுமா."
தொடர்ந்தார்:
"சின்னச் சின்ன செடி மரங்களே...!
நிழல் தர வேண்டிய நீங்களே
நிழலுக்கு அலையலாமா?"

புரிந்து கொண்ட செடி - மரங்கள் அறிவுரை கேட்டு நின்றன.
நாங்களும் தனியொரு பெரிய மரமாய் உருவாக
என்ன செய்ய வேண்டும்?
கடைசியாய்ச் சொன்னார்:
"சுய சார்பு கொள்ளுங்கள்.
சொந்தக் காலிலே நில்லுங்கள்."

*பரந்து வளர்ந்த ஆலமரத்தடியில்
எந்த மரமும் செழித்து வளர முடியாது.*

*அப்படி ஒரு வேளை வளர்ந்தால்
அது ஒட்டுண்ணியும் சாருண்ணியுமாகத் தான் இருக்கும்.*

அருட்பணி T. கிங்ஸிலி றொபட்



இம்மாதம் 4ம் திகதி, ஞாயிறு மாலை உரோம் நகரின் ஜெமெல்லி மருத்துவமனையில் பெருங்குடல் பிரச்சனை தொடர்பான நோய்க்கு அறுவைச்சிகிச்சை செய்யப்பட்ட திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் மேலும் சில நாட்களுக்கு அம்மருத்துவமனையிலேயே தங்கியிருந்து, அறுவைச்சிகிச்சையைத் தொடர்ந்து வரும் மருத்துவப் பராமரிப்புக்களை பெற்று யூலை 14 புதன்கிழமை 10.30 மணியளவில் மருத்துவமனையிலிருந்து வெளியேறி,

உரோம் நகரிலுள்ள மேரி மேஜர் பெருங்கோவிலுக்குச் சென்று அன்னை மரியாவின் உருவத்திற்கு முன் தன் உடல் நலனைப் பேணிக்காத்ததற்காக நன்றி கூறிய திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் இன்னும் தொடர்ந்து ஜெமெல்லி மருத்துவமனையில் சிகிச்சைபெற்றுவரும் அனைவருக்கும் நலமளிக்கும் படியும் வேண்டிக்கொண்டார். பின் வத்திக்கானில் தான் தங்கியிருக்கும் சாந்தா மார்த்தா இல்லத்திற்கு திரும்பினார்.

**"எப்பொழுதும் எது நடந்தாலும் நம்பிக்கை இழக்காதே, சோர்ந்து போகாதே, மனத்துணிவோடிரு" (புனித திருத்தந்தை 2ம் ஜான்போல்)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# இன்னுமா தயக்கம் – 18

## மனிதனின் சுதந்திரம்

இறையேசுவில் பிரியமான சகோதர சகோரரிகளே! மீண்டும் உங்களை திருமலைத்தீபம் இதழ் வாயிலாக சந்திப்பதில் மிகவும் மகிழ்ச்சியடகிறோம். உயிர்ப்புக் காலத்தில் இறைவனின் உடனிருப்பை உணர்ந்தவர்களாய் வாழ்கிறோம். இந்தப் பதிவில் மனிதனுக்கு இறைவன் கொடுத்துள்ள சுதந்திரத்தைப் பற்றி பார்ப்போம்.

### பகுத்தறிவு:

மிருகங்களையும் மனிதர்களையும் நாம் பிரித்துப் பார்க்கின்றோம் என்றால் அது அவர்களது அறிவைப் பொறுத்து அமைகின்றது. மனிதனுக்கு மட்டுமே ஆறறிவு உள்ளது, மற்றவற்றிற்கு ஐந்திறிவு தான் உள்ளது என்று அறிவியல் கூறுகின்றது. இந்த ஆறாம் அறிவு தான் பகுத்தறிவு என்று நாம் கூறுகின்றோம். இந்த பகுத்தறிவு இல்லாதவற்றை மிருகங்கள் என்று நாம் கூறுகின்றோம்.



ஒரு குரங்கு ஒரு காட்டில் எத்தனை வருடங்கள் இருந்தாலும், ஏன் எத்தனை தலைமுறைகள் அந்தக் காட்டில் இருந்தாலும், அது மரத்தில் தங்குவதை விட்டுவிட்டு ஒரு வீடு கட்டி வசதியாக வாழ வேண்டும், தனது வாழ்க்கை முறையை இன்னும் வசதியாக மாற்றிக் கொள்ள வேண்டும் என்று சிந்திப்பதில்லை. தனக்கு கொடுக்கப்பட்ட சூழ்நிலையில் எந்த கவலையுமின்றி வாழ்ந்து கொண்டிருக்கும். அந்த மிருகத்திற்கு அந்த நாளில் உள்ள பிரச்சனை மட்டும் தான் கண்ணுக்குத் தெரியுமே தவிர அதற்குப் பின் என்ன நடக்கும், அதற்கு தான் என்ன செய்ய வேண்டும். என்று சிந்திக்கத் தெரியாது. இது ஐந்தறிவு மிருகம். ஆனால் ஒரு மனிதனை அந்தக் குரங்கு இருக்கும் இடத்தில் விட்டால், அவன் அந்த சூழ்நிலையை கொஞ்ச நாட்களில் தனக்கு ஏற்றாற்போல் மாற்றிவிடுவான். இதுவே அவனது பகுத்தறிவாகும்.

### சிந்தனையே மனிதனின் சக்தி :

அதாவது, மனிதன், தன் வாழ்க்கைக்கு பல முடிவுகளை தொடர்ந்து ஆராய்ந்து எடுக்கின்றான். அதுவே அவனது பலம் அதுவே அவனது வளர்ச்சிக்கு வழிகோலுகிறது. உலகில் அதிகம் சிந்திக்கும் பிராணி முதன்மை பெறுகின்றது. உடல் சக்தியை விட மனித சக்தி முக்கியமாகின்றது. மனிதனை விட பல மடங்கு சக்தியுள்ள ஒரு மிருகம், எடுத்துக்காட்டாக யானை, மனிதனின் முன் மண்டியிடுகின்றது. காரணம், மனிதனால் யானையை விட சிறப்பாக சிந்திக்க முடியும். எனவே அந்த சிந்தனை கொண்டு அவ்வளவு பெரிய யானையை அவன் கட்டுப்படுத்துகின்றான். இதுவே இறைவன் மனிதனுக்குக் கொடுத்துள்ள சக்தி

இந்த சக்தியைக் கொடுத்துவிட்டு அவன் அதை சரியாகப் பயன்படுத்துகிறானா என்று பார்த்துக் கொண்டிருப்பதில்லை, இறைவன். அவனை அவர் சிறப்பாக உருவாக்கி அவனுக்கு அந்த சிறப்பை பயன்படுத்துவதற்கு சுதந்திரத்தையும் கொடுக்கின்றார். அவன் தன்னிச்சையாக முடிவுகள் எடுக்கின்றான். அதை இறைவன் மதிக்கின்றார். அவனுக்கு தான் கொடுத்த சக்தியினிமித்தம் மரியாதை தருகின்றார்.

### இறைவனின் தலையீடும் அவர் தந்த சுதந்திரமும்:

இன்று நம்மில் பலருடைய கேள்வி "இந்த செயல் இப்படி நடக்கும் என்று இறைவனுக்குத் தெரியுமல்லவா, ஏன் இறைவன் தடுக்கவில்லை, ஏன் இறைவன் தன் வலிய கரத்தின் மூலம் இதை மாற்ற வில்லை?"

பெரும்பாலும் இந்த கேள்வி, தவறுகள் நடக்கும் போது தான் நமக்கு வருகின்றது. நாம் செய்த நல்ல காரியங்களைப் பார்க்கும் போது கடவுளைப் பற்றி கொஞ்சம் கூட நினைத்தப் பாரக்க மாட்டோம். மாணவன் சிறப்பான வெற்றியடைந்தால் அது அந்த மாணவனின் அயராத முயற்சி என்றும் அவன் தோற்றுவிட்டால் அதற்கு அவனது ஆசிரியர் சரியில்லை என்றும் கூறும் சமுதாயத்திலிருந்து தானே நாம் வருகின்றோம். எனவே தவறு நடக்கும் போது, அது எனது தவறல்ல என்பது தான் மனித குணம் இதற்கு குறை சொல்ல யாருமே கிடைக்கவில்லை என்றால், இறுதியாக கிடைப்பது இறைவன் தான், ஏனென்றால் அவர் தான் நம்மிடம் திரும்ப கேள்வி கேட்கமாட்டார்!

"நாம் செய்யும் செயல்கள் தவறாக மாறும் பட்சத்தில் ஏன் இறைவன் தலையிட்டு நல்லவற்றை நமக்கு செய்வதில்லை? அப்படியானால் நான் தினமும் கோவிலுக்கு செல்வதற்கு என்ன பலன்? இறைவன் சுதந்திரத்தை தந்துவிட்டு அப்படியே இருந்துவிட்டாரென்றால் வழிபாடுகள் எதற்கு?" இது போன்ற கேள்விகள் நம் உள்ளத்தில் எழலாம்.

உண்மையில் இறைவனுக்கு எல்லாம் தெரியும் என்பதால் அவர் நமக்கு சில எச்சரிக்கைகளை நிச்சயமாக தந்து கொண்டு தான் இருக்கின்றார். சில வேளைகளில் அது நமக்கு தெரிவதில்லை, சில நேரங்களில் நாம் அதைக் கண்டும் காணாமல் சென்று விடுகின்றோம். இத்தகைய எச்சரிக்கைகளை அவர் தன்னை நாடிவருவோருக்கு கொடுத்துக் கொண்டே இருக்கின்றார். அவரை நாடுவோர் இதனை உணர்ந்து கொள்கின்றனர்.


நம் வழிபாடுகள், பக்தி முயற்சிகள் அனைத்தும் இதுபோன்று இறைவனின் தலையீட்டை நம் வாழ்வில் கொடுக்க வேண்டும் என்பதே நோக்கம், அதுவே நம் அனைவரது ஆசையாகவும் இருக்கின்றது. ஆனால், பல வேளைகளில் இது வெறும் ஆசையாக மட்டும் நின்றுவிடுவது தான் வேடிக்கை. இறைவனின் தலையீடு என்று கேட்டுவிட்டு நாம் இறைவனை விட்டுவிட்டு நம் தலையீட்டையும் பணம், பதவி, பட்டம் போன்ற மாயைகளின் தலையீடுகளுக்கும் தான் நம் வாழ்வில் முக்கியத்துவம் தருகின்றோம். இறைவனின் தலையீடு என்பது இறைவனை மட்டுமே பற்றிப்பிடித்துக் கொண்டிருப்பதில் உள்ளது. "இறைவன் ஒரு பக்கம் இருந்துவிட்டு போகட்டும், எனது வாழ்வில் எனக்கு சரி என்று படும் உலகப்படியான செயல்களையும் பார்க்க வேண்டுமல்லவா" என்று நமக்கு நாமே நியாயம் கற்பிக்கும் போது இறைவனின் தலையீட்டை விட மாயைகளின் தலைமையே முக்கியத்துவம் பெறுகின்றது.

ஒரு முக்கியமான செயலைச் செய்ய வேண்டும் என்றவுடன் நம்மில் பலர், ஆலயத்தில் வந்து ஜெபித்து முடிவு எடுக்க வேண்டும் என்று தான் நினைப்பதைவிட நல்ல நேரம் பார்க்க வேண்டும். பொருத்தம் பார்க்க வேண்டும் என்று தான் நினைக்கின்றார்கள். அந்த நேரத்தில் இறைவனின் தலையீடா அல்லது மாயையின் தலையீடா என்றால், அது மாயையின் தலைமை என்று தான் சொல்ல வேண்டும். இந்த இடத்தில் பிறர் எங்களை கிறிஸ்தவர் என்று சொல்ல வேண்டும் என்பதற்காகத் தான் ஆலயத்திற்கு செல்கின்றோம். மற்றபடி அனைத்தும் இறைவனின் தலையீட்டில் நடப்பதல்ல என்பது நாம் அனைவரும் அறிந்ததே.

### யார் நமக்கு தலைவர்:

இந்த சூழ்நிலையில் எனது வாழ்க்கை தவறாகிவிட்டது. நான் துன்பத்தில் இருக்கின்றேன். இந்த வாழ்க்கையை இறைவன் ஏன் மாற்றாமல் விட்டுவிட்டார்? அவருக்கு என் மீது அன்பு இருக்கின்றதா, அவருக்கு கண் இருக்கின்றதா, காது இருக்கின்றதா, மூக்கு இருக்கின்றதா? என்று புலம்புவதால் என்ன நலன் வந்துவிடப் போகின்றது. தேவையில்லாமல் நாம் செய்த தவறுகளுக்கு இறைவன் மீது குற்றம் சுமத்திக் கொண்டிருக்கின்றோம். உண்மையில் நம் அனைத்து துன்பங்களுக்கும் நமது வீம்பு பிடித்த மாயைதான் என்றால் அதை மறுக்க முடியுமா?

ஆழ்கடலில் ஒரு சிறிய மீன் தன் தாயிடம், "அம்மா, கடல் என்றால் என்ன? அது மிகப் பெரியதாயிருக்கும் என்று எல்லோரும் சொல்கிறார்களே, அது எங்கே இருக்கின்றது?" என்று கேட்டதாம். அதற்கு தாய் மீன் "நீ கடலில் தான் இருக்கின்றாய், இது தான் கடல்!" என்றதாம், ஆனால் அந்த சிறிய மீனுக்கு திருப்தியில்லை. பல மற்ற மீன்களிடமும் இதே கேள்வியைக் கேட்டது, எல்லோரும் அதே பதிலையே சொன்னார்கள். அந்த சிறிய மீன் நினைத்தது, இவர்களுக்கும் எதுவும் தெரியவில்லை, வேறு யாரையாவது கேட்கலாம், என்று. அப்போது. ஒரு வித்தியசமான உருவம் மேலே இருப்பதைப் பார்த்தது. அதை நோக்கி வேகமாகச் சென்றது. அது ஒரு படகு, அதில் ஒரு மனிதன் மீன்பிடிப்பதற்காக அமர்ந்திருந்தான். அந்தப் படகைப் பார்த்ததும், தாய் மீன், அங்கு போகாதே! என்று எச்சரித்தது. ஆனால் தாயின் எச்சரிக்கையைப் பொருட்படுத்தாமல் அந்தப் படகை நோக்கி அது விரைந்தது. அந்தப் படகில் இருந்த மனிதனை நோக்கி, "நான் கடலைப் பார்க்க வேண்டும். எனக்கு உதவி செய்வாயா?" என்று கேட்க, அவன் "நான் உதவி செய்கிறேன், இந்த அறைக்குள் வா!" என்று ஒரு வலைப் பையைக் காட்டுகிறான். அந்த மீனும் அந்த வலைப் பைக்குள் செல்ல, அவன் அதைப் பிடித்து தண்ணீருக்கு வெளியே அதைத் தூக்கி, சுற்றிப் பார், இது தான் கடல் என்று காட்டுகிறான். அப்போது தான், தான் அந்த மீனவனால் வேட்டையாடப்பட்டதை அந்த சிறிய மீன் உணர்ந்தது. "இந்தக் கயவனான மீனவனிடம் என்னை அநியாயமாக கைவிட்டுவிட்டாயே அம்மா!" என்று தன் தாயை நொந்து கொண்டது அந்த சிறிய மீன்,



இந்த மீன் வேட்டையாடப்பட்டதற்கு அந்த மீன் காரணமா, அல்லது அந்த மீனின் தாய் காரணமா?

இந்த கேள்வியை நம் வாழ்வில் நாமும் கேட்டுப் பார்ப்போம். நம் துன்பங்களுக்கு நாம் காரணமா, இறைவன் காரணமா, என்பது நமக்குப் புரியும். இறைவன் தன் பிள்ளைகளை ஒரு நாளும் துன்பப்பட அனுமதிப்பதே இல்லை. ஆனால், நாம் தான் விடாப்பிடியாக அவரது கரத்தைத் தட்டிவிட்டு தீமையின் பின் ஓடுகின்றோம். அதன் பின் இறைவன் எனக்கு துணை செய்யவில்லை என்று புலம்புகிறோம்.

நம் வாழ்வில் இறைவன் முக்கியமா? மாயை முக்கியமா? சிந்திப்போம்.

மீண்டும் உங்களை திருமலை தீபம் இதழ் வழியாக சந்திக்கும் வரை நன்றி கூறி விடை பெறுகிறோம்.

அருட்பணி. அலெக்ஸ் மரிய செல்லையா கப்புச்சின்

"கடவுள் தமது கட்டளைகளை அறிவதற்கும், அதன்படி நடப்பதற்கும் போதுமான அருளை அனைவருக்கும் அளித்துள்ளார்" (புனித லொயோலா இஞ்ஞாசியார்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிழக்கிலங்கை மனிதவள மேம்பாட்டு நிறுவனம்
# எகெட் கரித்தாஸ் திருகோணமலை

## தை தொடக்கம் ஆனி வரையான செயற்பாடுகள் – 2021
## அரையாண்டு அறிக்கை

**இலக்கு**

**பாதிக்கப்பட்ட மக்களின் சமூக, பொருளாதார, சுகாதார, கல்வி, கலாசார விழுமியங்களை அபிவிருத்தி செய்வதற்கு பங்களிப்புச் செய்வதுடன் ஊக்குவிப்பினூடாக அம்மக்களை ஊக்கப்படுத்தி அனைத்து சமூகங்களிடையே சமாதானம், நீதி, மனிதநேயம் என்பவற்றை மேம்படுத்தல்**

**தொலைநோக்கு**

**இன மத குல பால் பேதமற்ற அன்பு, மன்னிப்பு, சமாதானம், ஒற்றுமை, சமத்தவம் ஆகிய நற்செய்தி விழுமியங்களின் அடிப்படையில் நீதியானதும் மற்றும் சமாதானமுமான இலங்கைச் சமூகம் ஒன்றை உருவாக்குதல்**

### எகெட் கரித்தரிஸ் நிறுவனத்தின் புதிய அலுவலக கட்டடத்தின் அடிக்கல் நாட்டும் வைபவம்

எகெட் கரித்தாஸ் நிறுவனத்தின் புதிய அலுவலக கட்டடத்தின் அடிக்கல் நாட்டும் வைபவமானது 08.12.2020 அன்று மதிப்பிற்குரிய ஆயர் பேரருட்திரு கலாநிதி கிறிஸ்டியன் நோயல் இம்மானுவேல் ஆண்டகை, மறைமாநில குருமுதல்வர் அருட்பணி T. கிங்சிலி றொபட், புனித மரியாள் பேராலய அதிபர் அருட்பணி கலாநிதி B. போல் றொபின்சன், புனித மரியாள் பேராலய உதவிப்பங்குத்தந்தை அருட்பணி அலன் IVD மற்றும் எகெட் பணிப்பாளர் ஆகியோரின் ஆசீருடன், எகெட் பணியாளர்கள் Grace Construction கட்டட ஒப்பந்தகாரர்களுடன் இணைந்து நடைபெற்றது.





## இந்தியாவிலிருந்து மீள் திரும்பிய மக்களுக்கான திட்டம்

**தலைமைத்துவக் கருத்தமர்வு**

இந்தியாவிலிருந்து மீள்திரும்பி இரணைக்கேணி கிராம சேவையாளர் பிரிவுக்குட்பட்ட மக்களுக்கான தலைமைத்துவப் பயிற்சியானது 09.03.2021 அன்று நடைபெற்றது. இந்நிகழ்வின் வளவாளராக திரு.S சந்திரவதனன் அவர்கள் பயனாளிகளிடம் ஆளுமைப் பண்புகள், தலைமைத்தவத்தினூடாக எதிர்காலத்தில் சிறந்த தலைவராகச் செயற்படுவதற்குத் தேவையான திறன்கள், தன்னம்பிக்கையினூடாக தலைமைத்துவப் பண்புகளை வளர்ப்பது தொடர்பில் கலந்துரையாடிருந்தார்.

இந்தியாவிலிருந்து மீள்திரும்பி இலுப்பைக்குளம் வீதி, கன்னியா கிராம சேவையாளர் பிரிவிற்குட்பட்ட மக்களுக்கான தலைமைத்துவப் பயிற்சியானது 17.03.2021 அன்று கிராமசேவையாளர் அலுவலகத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வின் வளவாளரான திரு. அற்புதா அன்டன்ராஜ் அவர்கள் பயனாளிகளிடம் தலைமைத்தவம், தலைவரினது பண்புகள் பற்றி கலந்துரையாடியிருந்தார்.

பயனாளிகளை மூன்று குழுக்களாகப் பிரித்து அவர்களுக்குத் தேவையான பொருட்கள் வழங்கப்பட்டு கோபுரமொன்றினை நிர்மாணிக்கும் படியும் கூறப்பட்டது. அவர்களால் கட்டி முடிக்கப்பட்ட கோபுரம் அனைவரினதும் பார்வைக்காக வைத்ததன் பின்னர் அதன் மூலம் அடைந்த நன்மைகள், பயன்பாடுகள் தொடர்பிலும் பயனாளிகளினால் முன்மொழியப்பட்டது.









**மக்களிடையே சுகாதார மற்றும் ஆரோக்கியமான மேம்படுத்தல் தொடர்பான கருத்தமர்வு**

இந்தியாவிலிருந்து மீள்திரும்பிய இரணைக்கேணி கிராம சேவையாளர் பிரிவுக்குட்பட்ட மக்களுக்கான சுகாதாரம் மற்றும் ஆரோக்கிய கல்வி தொடர்பான பயிற்சியானது 25.03.2021 அன்று பொது சுகாதார பரிசோதகர் திரு T. தவராஜசேகரம் மற்றும் பொது சுகாதார மாது திருமதி S.காந்தி அவர்களின் வழிகாட்டலின் கீழ் நடைபெற்றது. இதன் போது சுகாதார நற்பழக்கவழக்கங்கள், சுற்றுச்சூழலை சுத்தமாக வைத்திருத்தல். ஆரோக்கியமான உணவுக்கூம்பகத்திலுள்ள உணவுக்கூறுகள் என்பவற்றுடன் கொவிட் - 19 தொற்று நோய்க்குரிய அறிகுறிகள், முற்பாதுகாப்பு நடவடிக்கைகள் என்பன பற்றி தெளிவுபடுத்தப்பட்டது.









**தொழிற் பயிற்சி மற்றும் தொழில் மேம்படுத்தல் ஆளுமை தொடர்பான கருத்தமர்வு**

இந்தியாவிலிருந்து மீள்திரும்பிய இரணைக்கேணி கிராம சேவையாளர் பிரிவுக்குட்பட்ட மக்களுக்கான தொழிற் பயிற்சி மற்றும் தொழில் மேம்படுத்தல் ஆளுமை தொடர்பான கருத்தமர்வொன்று எகெட் கரித்தாஸ் மண்டபத்தில் வளவாளர் திரு அன்டன் அற்புதராஜ் அவர்களின் வழிகாட்டலின் கீழ் நடைபெற்றது.

**Advocacy and Lobbying நிகழ்வு**

நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலையால் இடம்பெயர்ந்து இந்தியாவிற்குச் சென்று அகதிகளாக வாழ்ந்து மீள்திரும்பி அவர்களுக்கென அரசாங்கத்தினால் ஒதுக்கப்பட்ட வீட்டுத்திட்டத்தில் குடியிருக்கும் இரணைக்கேணி பிரதேச மக்களுக்கான எகெட் கரித்தாஸ் நிறுவனத்தால் செயற்படுத்தப்படும் பலவகையான திட்டங்களில் Advocacy and Lobbying நிகழ்வும் ஒன்றாகும். ஆயினும் நாட்டில் தற்பொழுது நிலவும் கொவிட் - 19 நோய்த்தொற்று காரணமாக அம்மக்களின் வேலையில்லாத நிலைமையினைக் கருத்திற் கொண்டு அத்திட்டத்திற்கமைவாக அம்மக்களின் பசியினைப் போக்கும் முகமாக உலர் உணவுப் பொதிகள் 28.06.2021 அன்று இரணைக்கேணி கிராம சேவையாளர் திருமதி. சுகைனா, பொருளாதார உத்தியோகத்தர் திரு. கௌரிதாசன் அவர்களுடன் இணைந்து வழங்கி வைக்கப்பட்டது.





**“கடவுள் அன்பைச் சுவைப்பது ஆனந்தம், கடவுளை நாடுவது ஒரு சாகசம், கடவுளைக் காண்பது ஒரு சாதனை” (புனித அகுஸ்தின்)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# AMITY திட்டத்தினது செயற்பாடுகள்

## இரண்டாம் மொழி சிங்கள வகுப்புக்கள்

இரண்டாம் மொழி சிங்கள வகுப்புக்கள் பட்டித்திடல் மகா வித்தியாலயம் மற்றும் மல்லிகைத்தீவு மகா வித்தியாலயத்தில் 27.01.2021 அன்று ஆரம்பமாகி, மூதூர் கல்வி வலயத்தில் பணி புரியும் சிங்கள ஆசிரிய ஆலோசகரினால் வாரத்தில் மூன்று நாட்கள் வகுப்புக்கள் நடைபெற்றுள்ளன.





## தைப்பொங்கல் நிகழ்வு

சமயங்களிடையே நல்லுறவை ஏற்படுத்தும் செயல்பாடாக தை மாதத்திலே இந்துக்களால் சூரியனுக்கும், உழவர்களுக்கும் நன்றி செலுத்தி சிறப்பிக்கப்படும் தைப்பொங்கல் நிகழ்வினை நாம் 15.01.2021 அன்று சிறப்பித்திருந்தோம்.







## மாதாந்தக் கூட்டம்

கன்னியா மற்றும் ஆண்டாங்குளத்திலுள்ள குழுக்களுடனான மாதாந்தக் கூட்டங்களானது ஒவ்வொரு மாதமும் நடைபெற்று திட்டத்தின் செயற்பாடுகள் குறித்து திட்டமிட்டு கலந்தாலோசிக்கப்படுகின்றது.





## Workshop on Strategic Planning



Workshop on Strategic Planning கருத்தமர்வானது 27.01.2021, 28.01.2021 ஆகிய தினங்களில் தீபம் நிலையத்தில் கன்னியா மற்றும் ஆண்டாங்குளத்திலுள்ள குழுக்களுக்கென நடைபெற்றது. திரு. விஜயகீர்த்தி அவர்களால் சிங்கள மொழிபேசும் ஆண்டாங்குளம் மக்களுக்காகவும், திரு. கணேஸ் அவர்களால் தமிழ் மொழி பேசும் கன்னியா மக்களுக்காகவும் கிராமமட்ட பல்வேறு பிரச்சினைகளை இனங்கண்டு முறுகல் நிலையை இல்லாது செய்யும் செயல்பாடுகளில் ஈடுபடும் வழிமுறைகள் குறித்தும் தெளிவூட்டப்பட்டது.

## பல்சமய ஒன்றியத்தின் வருடாந்த பொதுக்கூட்டம்

பல்சமய ஒன்றியத்தின் வருடாந்த பொதுக்கூட்டமானது 04.03.2021 அன்று ஸ்ரீ பத்திரகாளி அம்மன் ஆலய மண்டபத்தின் தலைவர் சிவஸ்ரீ இரவிச்சந்திரக் குருக்கள் அவர்களின் தலைமையில் ஆரம்பமாகியதுடன் புதிய நிர்வாக சபைத் தெரிவும் இடம்பெற்றது. பல்சமய ஒன்றியத்தினது புதிய தலைவராக சீனவராய பேமரத்ன தேரர் அவர்களும், செயலாளராக திரு M.A.M றிஸ்மி அவர்களும், பொருளாளராக திரு D.R மைக்கல் அவர்களும் தெரிவு செய்யப்பட்டனர். 2021ம் ஆண்டிற்குரிய செயற்றிட்டங்கள் பற்றியும் கலந்துரையாடப்பட்டது.












## கரித்தாஸ் குடும்பத்தின் வடக்கு நோக்கிய நட்புறவுப் பயணம்

யாழ்ப்பாணம் கியூடெக் கரித்தாஸ் நிறுவனத்தினரால் 300 ஏக்கர் நிலப்பரப்பில் Religious AMITY மற்றும் உணவுப் பாதுகாப்புத் திட்டத்தினுள் உள்வாங்கப்பட்ட பணியாளர்களுடன் இணைந்து அனைத்து கரித்தாஸ் குடும்பங்களிலிருந்தும் பெறப்பட்ட மரக்கன்றுகளை மரநடுகை செய்யும் நிகழ்வானது 09.03.2021 இடம்பெற்றது.

## இளையோருக்கான மேடை நாடகப் போட்டி

இனங்களிடையே சமாதானத்தையும், நல்லிணக்கத்தையும் ஏற்படுத்தும் நோக்குடன் தேசிய இளைஞர் சேவைகள் ஆணைக்குழுவுடன் இணைந்து எகெட் கரித்தாஸ் நிறுவனம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நாடகப் போட்டியானது சேருவில, தங்கபுரம் மற்றும் ஆண்டாங்குளம் பிரதேசத்திலுள்ள இளையோர்களின் பங்களிப்புடன் 05.03.2021 அன்று அரங்கேற்றப்பட்டதுடன் ஆண்டாங்குள பிரதேச இளைஞர்கள் முதல் இடத்தைப் பெற்றனர்.









## இளையோர்களுக்கான வலையமைப்பு உருவாக்குதல் தொடர்பான வதிவிடக் கருத்தமர்வு

Expansion of Religious AMITY திட்டத்தின் கீழ் வலையமைப்பு உருவாக்குதல் (website Development) தொடர்பான வதிவிடக் கருத்தமர்வானது தீபம் நிலையத்தில் 12.03.2021 - 14.03.2021 தினங்களின் நடைபெற்றது. இந்நிகழ்வின் வளவாளராக திரு. இம்தியாஸ் அவர்கள் செயலாற்றினார். அத்துடன் இளையோர்களுக்கான கலை கலாசார நிகழ்வும், யோகா மற்றும் உடற்பயிற்சிகளும் நடைபெற்றன.

## இளையோர்களுக்கான சமூக வலைத்தளங்கள் ( Workshop on Social Media and Photography) தொடர்பான வதிவிடக் கருத்தமர்வு







Expansion of Religious AMITY திட்டத்தின் கீழ் வலையமைப்பு உருவாக்குதல், புகைப்படமெடுத்தல் (Social Media and Photography) தொடர்பான வதிவிடக்கருத்தமர்வானது தீபம் நிலையத்தில் 15.03.2021 - 17.03.2021 தினங்களில் நடைபெற்றது. இந்நிகழ்வின் வளவாளராக திரு. கணேஸ், திரு. பென்ஜமின் தர்ஷனன் மற்றும் திரு. இம்தியாஸ் அவர்கள் செயலாற்றினார்கள். இதன் போது சமூக வலைத்தளங்களின் அனுகூலங்கள், பிரதிகூலங்கள், பயன்படுத்தும் முறை தொடர்பாகவும் புகைப்படத்துறையில் பிரசித்தமடைவதற்குரிய நுட்ப முறைகள் மற்றும் வலையமைப்பு உருவாக்குதல் தொடர்பாகவும் பயிற்சிகள் வழங்கப்பட்டன. இளையோர்களுக்கான கலை கலாசார நிகழ்வுகள், யோகா மற்றும் உடற்பயிற்சிகளும் நடைபெற்றன.

**“உண்மை என்பது சிங்கம் போன்றது அதைக் காப்பாற்ற முயற்சிக்க வேண்டாம், அது தன்னைத் தானே காப்பாற்றிக் கொள்ளும்” (புனித அகுஸ்தீன்)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மறைமாவட்டங்களுக்கிடையிலான உறவுப்பாலமும், அனுபவப் பகிர்வு நிகழ்வும்

மட்டக்களப்பு கரித்தாஸ் எகெட் நிறுவனத்தினது இளையோர் உறுப்பினர்கள், திருகோணமலை எகெட் கரித்தாஸ் நிறுவனத்தின் இளையோர் உறுப்பினர்களைச் சந்திக்கும் உறவுப்பாலம் மற்றும் அனுபவப் பகிர்வு நிகழ்வானது 10.04.2021 - 11.04.2021 தினங்களில் ஆண்டாங்குளம் கிராமத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வின் போது மறைமாவட்டங்களுக்கிடையிலான அன்பு, ஒற்றுமை, சமாதானம் என்பன வலுப்பெற்றதுடன் இனங்களுக்கிடையிலான நல்லிணக்கமும் ஏற்பட்டதுடன் கலை, கலாசார நிகழ்வுகளும் இடம்பெற்றன.








## சர்வதேச நல்லிணக்க தினத்தினைச் சிறப்பிக்கும் முகமாக மரநடுகை நிகழ்வு

சர்வதேச நல்லிணக்க தினத்தினைச் சிறப்பிக்கும் முகமாக மட்டக்களப்பு கரித்தாஸ் எகெட் நிறுவனத்தினதும், திருகோணமலை எகெட் கரித்தாஸ் நிறுவனத்தின் பணிப்பாளர்கள், இணைப்பாளர்கள், கன்னியா கிறிஸ்து அரசர் ஆலயத்தின் பங்குத்தந்தை, இளையோர் உறுப்பினர்கள் மற்றும் ஆண்டாங்குளம் கன்னியா கிராமமக்கள் ஆகியோர் இணைந்து பயன்தரு மரநடுகை நிகழ்வினை 11.04.2021 அன்று சிறப்பித்திருந்தார்கள்.

## எகெட் கரித்தாஸ் மறைமாவட்ட இளையோர் அமைப்பினை உருவாக்கும் நிகழ்வு

திருகோணமலை எகெட் கரித்தாஸ் நிறுவனமானது மறைமாவட்ட இளையோர் அமைப்பினை உருவாக்கும் நிகழ்வானது 11.04.2021 அன்று எகெட் கரித்தாஸ் கேட்போர் கூடத்தில் பணிப்பாளர் அருட்பணி டன்ஸ்டன் பெட்ரின் ஜோசப் அவர்களின் தலைமையில் ஆரம்பமானது. இதன் போது கன்னியா, அண்டாங்குளம் இளையோர்களுக்கான சமூக வலைத்தளங்கள் ( Workshop on Social Media and Photography) தொடர்பான வதிவிடக் கருத்தமர்வில் கலந்த கொண்டு பயணத்தடை இளையோர்கள், மற்றும் பங்குகளிலிருந்து CYA உறுப்பினர்களும் இணைந்து கொண்டிருந்ததுடன், நிர்வாகசபையினர் தெரிவு செய்யப்பட்டு, வருடாந்த செயற்றிட்டங்கள் தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டது.



## வறுமைக்கான காரணங்களைக் கருத்திற் கொள்ளலும் உணவுப் பாதுகாப்பை உறுதி செய்தலும் திட்டம்

### மக்கள் பங்களிப்புடனான கிராம ஆய்வு (PRA)

தெரிவு செய்யப்பட்ட கிண்ணியா மற்றும் தம்பலகமம் பிரதேச செயலகத்திற்குட்பட்ட தெரிவு செய்யப்பட்ட மயில்தீவு, காக்காமுனை, நெடுந்தீவு, மணியரசன்குளம், பனிச்சையடியாறு, சல்லிக்களப்பு, பனிச்சங்குளம், கிணத்தடிப்பள்ளம், கள்ளிமேடு, சிப்பித்திடல், நாயன்மார்திடல், புதுக்குடியிருப்பு, கோவிலடி, பட்டிமேடு, ஜயபுர, சிங்கபுர ஆகிய கிராமங்களில் தை, மாசி மாதங்களில் PRA நிகழ்வானது நடைபெற்றது. இதன் போது வரைபடம் அமைத்தல் (Mapping), கிராமங்களின் பௌதீக வளங்கள் (Village resources), வானிலை நிலபரங்கள், அன்றாட செயல்பாடுகள் என பல விடயங்கள் கலந்தரையாடப்பட்டது.

### பயனாளிகளைத் தெரிவு செய்தலும், திட்டம் குறித்து தெளிவூட்டலும்

திருகோணமலை எகெட் கரித்தாஸ் நிறுவனத்தினால் இவ்வருடம் (2021) 4ம் ஆண்டிலே வறுமைக்கான காரணங்களைக் கருத்திற் கொள்ளலும் உணவுப் பாதுகாப்பை உறுதி செய்தலும் திட்டத்தின் கீழ் கிண்ணியா மற்றும் தம்பலகமம் பிரதேச செயலகத்திற்குட்பட்ட நெடுந்தீவு, சல்லிக்களப்பு, காக்காமுனை, மயில்தீவு, கிணத்தடிப்பள்ளம், மணியரசன்குளம், பனிச்சையடியாறு, பனிச்சங்குளம், கள்ளிமேடு, சிப்பித்திடல், கோவிலடி, பட்டிமேடு, நாயன்மார்திடல், நடுபிறந்திடல், புதுக்குடியிருப்பு, ஜயபுர மற்றும் சிங்கபுர ஆகிய கிராமங்களிலிருந்து வீட்டுத்தோட்ட பயனாளிகளைத் தெரிவு செய்து அவர்களுக்கு திட்டம் சார்ந்த தெளிவூட்டல்களும் எமது பணியாளர்களால் வழங்கப்பட்டது.






## வீட்டுத்தோட்ட பயனாளிகளுக்கான வலுவூட்டல் நிகழ்வுகள்

வீட்டுத்தோட்ட பயனாளிகளுக்கான வலுவூட்டல் நிகழ்வானது விவசாயப் போதனாசிரியர்கள் திரு M.C மர்சூக், திரு A.C முகம்மட் சுஜா மற்றும் தொழிநுட்ப உத்தியோகத்தர் திரு. S. செந்தூரன் அவர்களினால் தெரிவு செய்யப்பட்ட கிராமங்களில் தை மற்றும் மாசி மாதங்களில் முன்னெடுக்கப்பட்டிருந்தது. இயற்கை முறையிலான வீட்டுத்தோட்டத்தினை ஊக்குவித்து, அவற்றிலிருந்து பயனுள்ள, நஞ்சற்ற வெளியீடுகளை பெறப்படுவதனூடாக எதிர்காலத்தில் நஞ்சற்ற சமுதாயத்தை உருவாக்கும் நோக்குடனான செயல்பாடுகள் அமைந்திருந்தன. இதன் போது வளவாளர்கள் இயற்கை முறை வீட்டுத்தோட்டத்தின் பயன்கள், அனுகூலங்கள் என்பன குறித்தும் பயனாளிகளுக்குத் தெளிவூட்டினார்கள்.









## வீட்டுத்தோட்ட பயனாளிகளுக்கான மாவட்ட அமைப்பினை உருவாக்குதலும், பரிந்துரைத்தல் (Advocacy and lobbying ) நிகழ்வும்

கடந்த மூன்று வருடங்களிலும் இத்திட்டத்தின் கீழ் பயனடைந்த மூதூர், திருகோணமலை பட்டிணமும் சூழலும், குச்சவெளி பிரதேசசபைக்குட்பட்ட பயனாளிகளை ஒன்றிணைத்து வீட்டுத்தோட்ட பயனாளிகளுக்கான மாவட்ட அமைப்பினை உருவாக்கும் நிகழ்வும் அவர்களுக்குரிய Advocacy and lobbying நிகழ்வும் 24.02.2021 திகதி மதிப்பிற்குரிய ஆயர் பேரருட்திரு. கலாநிதி கிறிஸ்டியன் நோயல் இம்மானுவேல், Caritas SEDEC தலைமைச் செயலக தேசிய இயக்குனர் அருட்பணி மகேந்திர குணதிலக, மாவட்ட இணைப்பாளர் திரு. நிசாந்தன், எகெட் பணிப்பாளர் அருட்பணி டன்ஸ்டன் பெட்ரிக் ஜோசப் மற்றும் எகெட் திட்ட முகாமையாளர் திரு G.A பிரான்சிஸ் ஆகியோரின் தலைமையில் தீபம் நிலையத்தில் நடைபெற்றது. இதன் போது வளவாளர் கமநல திணைக்களத்தைச் சேர்ந்த அபிவிருத்தி உத்தியோகத்தர் திரு S. தீபராஜ் அவர்கள் மாவட்ட அமைப்பினை உருவாக்குவதற்கு உதவி புரிந்ததுடன் சங்கத்தைப் பதிவு செய்வது, பரிந்துரைகள் எனபவற்றை மிகத் தெளிவாக பயனாளிகளுடன் பகிர்ந்திருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

## காலநிலை மாற்றத்திற்கேற்றவாறாக வீட்டுத்தோட்டப் பயிர் செய்வது தொடர்பான கருத்தமர்வு

கடந்த மூன்று வருடங்களிலும் இத்திட்டத்தின் கீழ் பயனடைந்த மூதூர், திருகோணமலை பட்டிணமும் சூழலும், குச்சவெளி பிரதேசசபைக்குட்பட்ட பயனாளிகளை ஒன்றிணைத்து காலநிலை மாற்றத்திற்கேற்றவாறாக வீட்டுத்தோட்டப் பயிர் செய்வது தொடர்பான கருத்தமர்வானது 24.02.2021 திகதி தீபம் நிலையத்தில் நடைபெற்றது. நிகழ்வின் வளவாளராக விவசாயப் போதனாசிரியர் திரு.N.M றிஸ்வான் அவர்கள் மாறி வரும் பருவ காலநிலைக்கு ஏற்றவாறாக பயிர்ச்செய்கைகளை எவ்வாறு பாதுகாக்கலாம், சூழலுக்கு நன்மை பயக்கும் மற்றும் நன்மை பயக்காத பூச்சியினங்களை எவ்வாறு விரட்டி, தடுப்பதனூடாக அதிக விளைச்சலைப் பெறலாம் என்பன தொடர்பாக பயன்மிக்க விடயங்களைப் பயனாளிகளுக்குத் தெரியப்படுத்தினார்.


**“தங்களது பெற்றோரால் ஆசீர்வதிக்கப்பட்டவர்கள், கடவுளால் ஆசீர்வதிக்கப்பட்டவர்கள். செல்வத்தை விட ஆசியே சிறந்தது” (புனித அம்புரோஸ்)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வீட்டுத்தோட்ட பயனாளிகளுக்குரிய பயிர்விதைகள் மற்றும் மரக்கன்றுகள் வழங்கி வைக்கும் நிகழ்வு

4ம் ஆண்டிலே வறுமைக்கான காரணங்களைக் கருத்திற் கொள்ளலும் உணவுப் பாதுகாப்பை உறுதி செய்தலும் திட்டத்தின் கீழ் கிண்ணியா மற்றும் தம்பலகமம் பிரதேச செயலகத்திற்குட்பட்ட வீட்டுத்தோட்ட பயனாளிகளுக்குரிய அறிமுக நிகழ்வு மற்றும் வலுவூட்டல் நிகழ்வுகளின் பின்னராக அவர்கள் வீட்டுத்தோட்டம் செய்வதற்குரிய பயிர்விதைகள் மற்றும் மரக்கன்றுகளை எகெட் கரித்தாஸ் நிறுவனத்தினால் வழங்கி வைக்கப்பட்டு வருகின்றன.









## இணைப்பாளர் மற்றும் களப்பணியாளர்களின் களத்தரிசிப்பு

திட்ட இணைப்பாளர் மற்றும் களப்பணியாளர்களினால் மூதூர், திருகோணமலை பட்டிணமும் சூழலும், குச்சவெளி மற்றும் கிண்ணியா, தம்பலகமம் பிரதேசத்தில் தெரிவு செய்யப்பட்ட கிராமங்களின் களத்தரிசிப்புக்களானது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. குறிப்பாக ஒவ்வொரு புதன்கிழமைகளிலும் 1ம், 2ம், 3ம் ஆண்டுகளில் பணியாற்றிய கிராமங்களின் தற்போதைய நிலவரங்களை அறிவதற்கான களத்தரிசிப்புக்களும் நடைபெற்று வருகின்றன.

## பால்நிலை சமத்துவம் தொடர்பான கருத்தமர்வு (Gender Sensitization & Mainstreaming)

தெரிவு செய்யப்பட்ட கிராமங்களிலுள்ள வீட்டுத்தோட்டப் பயனாளிகளை உள்ளடக்கி குறிஞ்சாக்கேணி விவசாயத்திணைக்கள மண்டபத்தில் 30.03.2021 அன்று பால்நிலை சமத்துவம் தொடர்பான கருத்தமர்வானது வளவாளர் அவர்களின் தலைமையில் நடைபெற்றது. வளவாளர் திருமதி P. கிருஸ்ணவேணி அவர்களினால் "Gender Sensitization & Mainstreaming"எனும் கருப்பொருளை மையமாகக் கொண்டு நடைபெற்றது. இதன் போது பால்நிலை சமத்துவம், ஆண்கள் மற்றும் பெண்களுக்கிடையிலான சமத்துவத்தை நாம் எவ்வாறு பேணும் முறைகள், பொறுப்புக்கள் எனும் வரும்பொழுது ஆண்கள் மற்றும் பெண்கள் இருவரும் இணைந்து எவ்வாறு செயற்படும் விதம் என்பன தொடர்பாக வளவாளரால் பயனுள்ள பல தகவல்கள் பரிமாறப்பட்டன.





## இயற்கை முறையிலான உரப்பசளை தயாரித்தல் தொடர்பான வலுவூட்டல்





2021ம் ஆண்டில் தெரிவு செய்யப்பட்ட கிண்ணியா மற்றும் தம்பலகமம் பிரதேச செயலகத்திற்குட்பட்ட தெரிவு செய்யப்பட்ட மயில்தீவு, காக்காமுனை, நெடுந்தீவு, மணியரசன்குளம், பனிச்சையடியாறு, சல்லிக்களப்பு, பனிச்சங்குளம், கிணத்தடிப்பள்ளம், கள்ளிமேடு, சிப்பித்திடல், நாயன்மார்திடல், புதுக்குடியிருப்பு, கோவிலடி, பட்டிமேடு, ஜயபுர, சிங்கபுர ஆகிய கிராமங்களில் இயற்கை முறையிலான உரம், திரவப்பசளை, பூச்சிவிரட்டி என்பவற்றை தயாரிப்பது தொடர்பிலான வலுவூட்டல் செயன்முறைப் பயிற்சிகள் கிராமங்களுக்குப் பொறுப்பாகவிருக்கும் விவசாயப் போதனாசிரியர்களினால் வழிநடத்தப்பட்டது.

## நீண்ட கால பயன்தரு மரங்கள் வழங்கும் செயற்பாடு

2018ம், 2019 மற்றும் 2020ம் ஆண்டில் வறுமைக்கான காரணங்களைக் கருத்திற் கொள்ளலும் உணவுப் பாதுகாப்பை உறுதி செய்தலும் திட்டத்தின் கீழ் உள்வாங்கப்பட்டு சிறப்பான முறையில் தங்களது வீட்டுத்தோட்டத்தினை நடைமுறைப்படுத்தி வரும் 450 பயனாளிகளைத் தெரிவு செய்து அவர்களுக்கு நீண்ட கால பயன்தருகின்ற தென்னை, கொய்யா, கறுவாப்பட்டை, ஜம்பு மற்றும் லொவி மரக்கன்றுகளை அக்கிராமங்களிலுள்ள கிராம சேவகர்களின் உதவியுடனும், அனுமதியுடனும் எகெட் கரித்தாஸ் நிறுவனத்தின் பணியாளர்களால் 21.06.2021, 22.06.2021, 29.06.2021 மற்றும் 30.06.2021 ஆகிய தினங்களில் வழங்கி வைக்கப்பட்டது.





## Education Support for War Affected Children திட்டத்தின் – தலைமைச் செயலக மேற்பார்வை






Education Support for War Affected Children திட்டத்தின் தலைமைச் செயலகத்தின் மேற்பார்வையானது 10.02.2021 மற்றும் 11.02.2021 ஆகிய தினங்களில் நடைபெற்றது. 10.02.2021 அன்றையதினம் மாணவர் பெற்றோர்களுடனான கூட்டமானது எகெட் கரித்தாஸ் மண்டபத்தில் திட்டத்தின் குறிக்கோள்கள், பயனாளிகளின் தெரிவு என்பன குறித்த கலந்துரையாடல்கள் நடைபெற்றதுடன், 11.02.2021 திகதி மாணவர்களினது பாடசாலை மற்றும் இல்லங்களும் தரிசிக்கப்பட்டன. மாணவர்களுடைய அடைவுமட்டங்கள் எதிர்பாராதவிதமாகவும் திருப்தியளிக்கக்கூடிய நிலையிலும் இருந்தன.


## Special Coaching on Value Education Seminar


Education Support for war Affected Children திட்டத்திற்குள் உள்வாங்கப்பட்ட மாணவர்கள், பெற்றோர்களுக்குரிய 'Special Coaching on Value Education' கருத்தமர்வானது 05.03.2021 அன்று எகெட் கரித்தாஸ் SSC மண்டபத்தில் காலை 9.00 மதியம் 1.00 மணிவரை ஒரு பிரிவினருக்கும், மதியம் 1.30 மாலை 4.00 மணி வரை இரண்டாம் பிரிவினருக்கும் நடைபெற்றது.


காலையில் நடைபெற்ற கருத்தமர்வில் விசேட விதமாக கடந்த 2019ம் ஆண்டிலே க.பொ.த சாதாரண தரத்தில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்ற செல்வன் சுரேஸ் ஹேமன் (7A,B,C) செல்வி வேணுசரண்யா திருச்செல்வம் (6A,B,2C) ஆகியோரினை கௌரவிக்கும் நிகழ்வானது அருட்பணி X.I ரஜீவ (உப அதிபர் புனித சூசையப்பர் தேசிய கல்லூரி, அதிபர் புனித யோசேப்வாஸ் சிறிய குருமடம் - சாம்பல்தீவு) தலைமைதாங்கி மாணவர்களுக்குரிய விருதுகள் மற்றும் சான்றிதழ்களை வழங்கி கௌரவித்திருந்தார். அத்துடன் சிறப்பு விருந்தினர் உரையில் மாணவர் மற்றும் பெற்றோர்களுக்குத் தேவையான கல்வி, வாழ்வியல், சமய விழுமியங்களையும் பற்றி கூறினார்.

மேலும் இதன் போது வளவாளர் திரு.P. ரவிச்சந்திரன் (Probation Officer, Department of Probattion, Trincomalee) அவர்களினால் அறிவு விருத்தி, திறன் விருத்தி, மனப்பாங்கு விருத்தி, கல்வியின் நோக்கங்கள், கல்வியின் வகைகள் (Formal Education, Informal Education, Non formal Education) கல்வி கொள்கைகள், விழுமியங்கள், தனிமனித சமூக ஆன்மீக மற்றும் நடத்தைசார் விழுமியங்கள் பற்றிய ஆழமான பல கருத்துக்களைப் பல மூலமாக பரிமாறியிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.









**"கடவுள் இரக்கமுள்ளவர் ஆகவே, கவலைப்படாமல் செபியுங்கள் உங்கள் செபங்களை அவர் கேட்பார்" (புனித பியோ)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Misereor வாழ்வாதார உதவித்திட்டம்

Misereor நிதியுதவியுடன் 22 மாதங்களைக் கொண்ட, திருகோணமலை மாவட்டத்திலுள்ள 75 வறிய குடும்பங்களுக்கு கோழி வளர்ப்பு, ஆடு வளர்ப்பு, சிறுகடை வியாபாரம், தையல் இயந்திரம் மற்றும் ஏனைய சுயதொழில் விருத்திக்கான வாழ்வாதார உதவியை வழங்கும் நோக்குடனான இத்திட்டமானது எம்மால் செயற்படுத்தப்பட்டு வருகின்றது. பயனாளிகளிடமிருந்து தகவல்கள் சேகரிக்கப்பட்டு, அவர்களுக்குரிய தொழில்விருத்திக் கருத்தமர்வுகள் செய்யப்பட்டதன் பின்னர் அவர்களுக்குத் தேவையாகவுள்ள வாழ்வாதார உதவிகள் எம்மால் பூர்த்தி செய்யப்பட்டு வருகின்றன.






## தலைமை செயலகத்தின் ZOOM கூட்டங்கள்


கொவிட் - 19 சூழ்நிலையின் காரணமாக எமது தலைமைச் செயலகம் Caritas Sri Lanka SEDEC உணவுப்பாதுகாப்புத் திட்டம், AMITY, Educational Support for War affected Children Project, Indian Returnee, ACNS முன்பள்ளித்திட்டம், மற்றும் Miserreor வாழ்வாதாரத் திட்டங்களினது கலந்துரையாடல்கள், தீர்மானங்களை ZOOM கூட்டங்களினூடாக செயற்படுத்தியிருந்ததுடன் குறிப்பாக 28.06.2021 அன்று யாழ்ப்பாண மறைமாவட்ட ஆயர் பேரருட்திரு கலாநிதி ஜஸ்டின் ஞானப்பிரகாசம் ஆண்டகை, கொழும்பு துணை ஆயர் பேரருட்திரு கலாநிதி மெக்ஸ்வெல் சில்வா ஆண்டகை ஆகியோரின் தலைமையில் அனைத்து Caritas வலையமைப்புடன் இணைந்து செயற்படுத்தியிருந்தமை சிறப்பான விடயமாகும்





## பங்குகளுக்கான கொவிட் – 19 நிவாரண உதவிகள்

கொவிட் - 19 சூழ்நிலைகளினாலும், தொடர்ச்சியான முடக்கத்தினாலும் பல்வேறு வகையில் தொழிலை இழந்து அல்லலுற்ற திருகோணமலை மறைமாவட்டத்திலுள்ள பங்குகளில் வாழும் மக்களுக்கு எகெட் கரித்தாஸ் நிறுவனத்தினால் இவ்வாண்டும் (2021) உலர் உணவுப் பொதிகள் வழங்கி வைக்கப்பட்டன.




## வருடாந்த தவக்கால கல்வித்திட்டத்தின் பங்களிப்பு

'சிறிய அன்பிய குழுமங்களினூடாக சகோதரத்துவத்தை நோக்கி' எனும் 2021ம் ஆண்டிற்கான வருடாந்த தவக்கால சிந்தனையுடன் எமது தவக்கால கல்விச் செயற்பாடுகள் ஆரம்பமானது. திருகோணமலை மறைமாவட்டத்தின் பங்குகளிலிருந்து இவ்வாண்டும் மாணவர்களின் கல்வி உதவிக்கான பங்களிப்புக்கள் பெறப்பட்டன. எகெட் கரித்தாஸ் நிறுவனம் அனைத்து பங்குத்தந்தையர்களுக்கும், பங்கு மக்களுக்கும் மனதார நன்றிகளைத் தெரிவிப்பதுடன், ஒத்துழைப்பினையும் பங்களிப்பினையும் தொடர்ந்து எதிர்பார்க்கின்றது.

### பங்குகள் ரீதியான தவக்கால பங்களிப்புக்கள்

| இல | பங்குகளின் பெயர் | பங்களிப்புக்கள் (ரூபாய்) |
|---|---|---|
| 01 | புனித மரியாள் பேராலயம் | 24,291.00 |
| 02 | புனித திருமுழுக்கு யோவான் ஆலயம் - சாம்பல்தீவு | 18,137.00 |
| 03 | புனித செபமாலை அன்னை ஆலயம் - குச்சவெளி | 17,370.00 |
| 04 | புனித குவாடலூப்பே அன்னை ஆலயம் - சின்னக்கடை | 12,100.00 |
| 05 | புனித சதாசகாய அன்னை ஆலயம் - கந்தளாவ | 10,350.00 |
| 06 | குழந்தை இயேசு ஆலயம் - உவர்மலை | 10,235.00 |
| 07 | புனித சதாசகாய அன்னை ஆயலம் - அன்புவழிபுரம் | 10,080.00 |
| 08 | புனித சூசையப்பர் ஆலயம் - நிலாவெளி | 10,000.00 |
| 09 | இறையிரக்க திருத்தலம் - அலஸ்தோட்டம் | 8,609.00 |
| 10 | புனித அந்தோனியார் ஆயலம் - மூதூர் | 6,750.00 |
| 11 | புனித வேளாங்கண்ணி அன்னை ஆலயம் - ஆண்டாங்குளம் | 5,580.00 |
| 12 | திரு இருதய ஆண்டவர் ஆலயம் - இருதயபுரம் | 4,600.00 |
| 13 | கிறிஸ்து அரசர் ஆலயம் - கன்னியா | 3,570.00 |
| 14 | கப்பல்துறை மற்றும் தம்பலகமம் பங்கு | 1,832.00 |
| 15 | புனித வனத்து அந்தோனியார் ஆலயம் - செல்வநாயகபுரம் | - |
| 16 | புனித அந்தோனியார் ஆயலம் - சீனன்குடா | - |
| 17 | புனித யூதாததேயு ஆலயம் - இலிங்கநகர் | - |
| | மொத்தம் | 143,504.00 |


## தொண்டு செயற்பாடுகள்



எகெட் கரித்தாஸ் நிறுவனத்தினூடாக வறுமைக்கோட்டின் கீழ் வாழும் குடும்பங்களின் பிள்ளைகளுக்குரிய கல்விச் செயற்பாட்டிற்குரிய கற்றல் உபகரணங்கள், வறிய குடும்பங்களைச் சேர்ந்தவர்களுக்குரிய உலர் உணவுப் பொதிகள் வழங்கி வைக்கப்பட்டன.

## முன்பள்ளி கட்டடத்தின் அடிக்கல் நாட்டும் வைபவம்

விளாங்குளம் பிரதேசத்திலுள்ள முன்பள்ளி சிறார்களின் எதிர்கால நலன் கருதி WILDE GANZEN, ACNS Projecthulp நெதர்லாந்து ஆகியோரின் அனுசரணையுடன் அவர்களுக்குரிய முன்பள்ளியை நிர்மாணிப்பதன் முதற் கட்டமாக 30.06.2021 அன்று அடிக்கல் நாட்டும் வைபவமானது எகெட் கரித்தாஸ் நிறுவனத்தின் பணிப்பாளர், திட்ட முகாமையாளர், நிர்வாக உத்தியோகத்தர், RDS தலைவர், கட்டட ஒப்பந்தக்காரர்களுடன் முன்பள்ளி ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர் பிள்ளைகளுடன் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கதாகும்.





## எகெட் கரித்தாஸ் நிறுவனத்தின் அலுவலகத்தின் இடமாற்றம்

கடந்த 43 வருடங்களாக, இல: 295, டொக்யாட் வீதி, திருகோணமலை எனும் முகவரியில் சேவையாற்றிய எகெட் கரித்தாஸ் நிறுவனமானது 2021.07.16ம் திகதி முதல் இல: 78, புனித மரியாள் வீதி, திருகோணமலை (புனித மரியாள் பேராலயத்திற்கு முன்பாக) எனும் முகவரியில் தனது பணியைத் தொடரவுள்ளதென உங்கள் அனைவருக்கும் தெரிவித்துக் கொள்கின்றது.

"தாழ்ச்சியோடு வாழும் மனிதர் தன் முழு நம்பிக்கையையும் கடவுள் மீது கொண்டிருப்பார்"
(புனித பவுஸ்தீனா)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புனித மாற்கு நற்செய்தி
# 3,4ம் அதிகாரம்

- எல்லோரும் பங்குபற்றலாம்
- போட்டோ பிரதிகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது
- அதிர்ஸ்டசாலி குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்படுவர்.
- பரிசுகள் முறையே 1ம் பரிசு 500/= 2ம் பரிசு 300/= 3ம் பரிசு 200/=

**கேள்வி பதில்**

01. இயேசு சினத்துடன் அவர்களைச் சுற்றிலும் திரும்பிப் பார்த்து அவர்களது எதைக் கண்டு வருந்தினார்?

விடை:.................................................................

02. இயேசு படகின் பிற்பகுதியில் என்ன செய்து கொண்டிருந்தார்?

விடை:.................................................................

03. விதைப்பவர் உவமையின் விளக்கத்தில் பயன் அளிப்பவர்கள் யார்?

விடை:.................................................................

04. "இறைமகன் நீரே" என்று கத்தியது எது?

விடை:.................................................................

05. கடவுளின் திருவுளத்தை நிறைவேற்றுபவர்கள் யார் என்று இயேசு கூறுகிறார்?

விடை:.................................................................

**சரி, பிழை எழுதுக.**

06. இயேசு பன்னிருவரை திருத்தூதர் என்று பெயரிட்டார் ( )

07. கேட்கச் செவியுள்ளோர் கேட்கட்டும் என்று இயேசு கடுகுவிதை உவமையிவல் கூறுகிறார் ( )

08. வேரற்றவர்கள் பாறைப் பகுதியில் விதைக்கப்பட்ட விதைகள் ( )

09. தூயஆவியாரைப் பழிந்து உரைப்பவர் எவரும் எக்காலத்திலும் மன்னிப்புப் பெறுவார். ( )

10. நான்காம் அதிகாரத்தில் காணப்படும் உவமைகள் ஐந்து ( )

**கோடிட்ட இடங்களை நிரப்புக.**

11. விதைப்பவர் விதைப்பது ______________________

12. ____________ ____________அவர் அவர்களிடம் பேசியதில்லை

13. பரிசேயர் வெளியேறி ______________சேர்ந்து இயேசுவை எப்படி ______________ என அவருக்கு எதிராகச் ______________ செய்தனர்.

14.______________ தன்னையே எதிர்த்து நின்று ______________ப் போனால் அவன் நிலைத்து நிற்க முடியாது. அதுவே அவனது ____________

15.__________பழித்து உரைப்பவர் எவரும் எக்காலத்திலும்__________ அவர் என்றென்றும் ______________பாவத்திற்கு ஆளாவார்.

பெயர் :.................................................................

முகவரி:.................................................................

பங்கு :.................................................................

முடிவுத்திகதி 15.09.2021

# ஹாய் குட்டீஸ்
# திருவிவிலிய புதிர் போட்டி – 45
# யோபு அதிகாரம் 21 – 31

01. கடவுளோடு ஒப்புரவாகும் வழியில் யாருக்கு எது சொந்தமாயிற்று?

விடை:.................................................................

02. தீயோர்க்கும் கொடியோர்க்கும் வருவது எது?

விடை:.................................................................

03. யோபுவின் மாசின்மையில் நேர்மையாளரும், மாசற்றவரும் என்ன செய்வர்?

விடை:.................................................................

04. சிலர் எப்படிச் சாகின்றனர் என்று யோபு கூறுகிறார்?

விடை:.................................................................

.................................................................

05. எது என்னை மறைக்கிறது? என் முகத்தை எது கவ்வியது?

விடை:.................................................................

06. பெரும் திகிலினால் யோபுவின் பெருமைக்கும், சொத்துக்கும் நடந்தது என்ன?

விடை:.................................................................

.................................................................

07. யோபுவின் குடிசை மீது இருந்தது என்ன?

விடை:.................................................................

08. நகரில் இறப்போரின் எது கேட்கிறது? காயமடைந்தோர் உள்ளம் எதற்கு கதறுகிறார்கள்?

விடை:.................................................................

09. மதிப்பினில் முத்தினை எது விஞ்சும்?

விடை:.................................................................

10. யோபு எதனால் வான்வெளியை ஒளிர்வித்தார்?

விடை:.................................................................

11. எதைப் போன்ற மனிதர் தாழ்ந்தவர் என பில்தாது கூறினான்?

விடை:.................................................................

12. சாகும் வரையில் எதைக் கைவிட மாட்டேன் என்று யோபு கூறுகிறார்?

விடை:.................................................................

13. வலியோரின் வாழ்வை நீட்டிக்கிறவர் யார்? எதனால்?

விடை:.................................................................

14. கடவுளோடு ஒப்புரவாகும் வழியில் கடவுள் யாருடைய ஆணவத்தை அழிக்கிறார்? யாரை மீட்கிறார் என்று எலிப்பாசு கூறுகிறார்?

விடை:.................................................................

.................................................................

15. யாழின் ஓசையும், குழலின் ஒலியும் என்ன ஆயிற்று என்று யோபு தனது துன்பநிலையை கூறுகிறார்?

விடை:.................................................................

பெயர் :.................................................................

முகவரி:.................................................................

பங்கு :.................................................................


முடிவுத்திகதி 15.09.2021

"நற்செயல்களை நம்பிக்கையோடு செய்வதால் பாவங்கள் களையப்படுகின்றன"
(புனித சிறில்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர்களுக்கான போட்டி

## படத்திலுள்ள 06 வித்தியாசங்களைக் கண்டுபிடித்தலும் நிறம் தீட்டலும்



- பாலர் முதல் தரம் 05 வரையுள்ள மறைக்கல்வி மாணவர களுகசு.
- திருமலைத்தீபத்தில் தரப்படும் படம் 01ற்கு மாத்திரம் நிறந்தீட்டி படம் 02 வித்தியாசங்களைக் கண்டுபிடித்து படத்திலேயே குறிக்க வேண்டும்
- போட்டோ பிரதிகள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது
- 1, 2, 3ம் இடங்களைப் பெறுபவர்களுக்கு பரிசுகள் வழங்கப்படும்

1ம் பரிசு - 500/- 2ம் பரிசு - 300/- 3ம் பரிசு - 200/-

பெயர் : ..........

முகவரி : ..........

தரம் : ..........

பங்கு : ..........

முடிவுத்திகதி : 15.09.2021

## விடுபட்ட எழுத்துப் புதிர்ப் போட்டி – 37 (முடிவுகள்)

**போட்டியில் கலந்து கொண்டோர் – 33**

**சரியான விடையளித்தோர் – 21**

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| ஆ | தா | ய | ம் | த | ரு | வ | து | பி | |
| வி | அ | றி | வீ | ன | மா | ன | | ற | டு |
| க | டி | று | ன் | சா | ற் | ந | | ழ் | தோ |
| ளு | மை | கை | ம் | பெ | ண் | க | ள் | ந் | த் |
| க் | த் | | தொ | ண் | ட | னா | ய் | து | ன |
| கு | த | | ல் | சொ | ச் | ழி | ப | | ம |
| ம் | ளை | க | கா | க் | பு | ப் | ர் | தீ | ள |
| | ம் | கு | க் | ளு | க | னை | த | போ | ரா |
| நி | லை | வா | ழ் | வை | அ | ரு | ள் | | தா |
| | ர் | வ | ள | ள் | வு | றை | நி | ன | ம |

01. ஆவிகளுக்கும் (4:1)
02. தொண்டனாய் (4:6)
03. அருள் (4:4)
04. கைம்பெண்கள் (5:13)
05. போதனைகளுக்கும் (4:1)
06. நற்சான்று (5:10)
07. தீர்ப்புக்காக (5:24)
08. அடிமைத்தளை (6:1)
09. பழிச்சொல் (6:1)
10. ஆதாயம்தருவது (6:6)
11. மனநிறைவுள்ளவர் (6:6)
12. அறிவீனமான (6:9)
13. பிறழ்ந்து (6:10)
14. நிலைவாழ்வை (6:12)
15. தாராளமனத்தோடு (6:18)

### பரிசுக்குரியவர்கள்

| 1ம் பரிசு | 2ம் பரிசு | 3ம் பரிசு |
|---|---|---|
| R. அர்னோன் | இ. திலுக்ஷிக்கா | புஸ்பா சேவியர் |
| சகாயபுரம் | 18/4 வேளாங்கண்ணி வீதி | 58/6 மத்தியவீதி |
| மூதூர் | பாலையூற்று | உவர்மலை |

பங்குபற்றிய அனைவருக்கும் நன்றிகளும் பாராட்டுக்களும்

"உலகத்தை நீ மாற்ற விரும்பினால், முதலில் உன் வீட்டிலிருப்பவர்களை அன்பு செய்யக் கற்றுக் கொள்" (புனித அன்னை திரேசா)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திருகோணமலை மறைமாவட்டத்தின் ஏற்பாட்டில்

# CHANNEL HOLY MARY

**HOLY MARY** தொலைக்காட்சியில்

விரைவில்...

Holy Mary channel is for catholics.
It gives the live telecast prayers from the church.

# 'நம்பிக்கைப் பயணம்'


தினமும் காலை **10.00 – 10.30** மணிவரை

- பிரதி வெள்ளி தோறும் 'செபமும் செபவேண்டுதலும்'
- பிரதி சனி தோறும் 'மரியன்னை தியானங்கள்'
- பிரதி ஞாயிறு தோறும் 'விவிலியம் அறிவோம்'

உரைகள், கலந்துரையாடல்கள், பாடல்கள், பல்வேறு தலைப்புக்களில் தியானங்கள்.
தினமும் அரை மணிநேரம்.

## "ஓய்வு உடலுக்கும் மட்டுமல்ல நம் இதயத்திற்கும் தேவை"

### ஓய்வெடுப்பதன் முக்கியத்துவம் குறித்து திருத்தந்தை



வத்திக்கான் புனித பேதுரு வளாகத்தில் குழுமியிருந்த விசுவாசிகளுக்கு, அந்நாளின் நற்செய்தி வாசகம் (மாற் 6:30-34) குறித்து மூவேளை செப உரை வழங்கிய திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், இந்நாள் நற்செய்தி வழங்கும் வாழ்வின் இரு முக்கியக் கூறுகள் குறித்து விளக்கினார்.

திருத்தூதர்கள் இயேசுவிடம் திரும்பிவந்து, தாங்கள் செய்தவை, கற்பித்தவை எல்லாவற்றையும் தெரிவித்தபோது, அவர்களை நோக்கி, "நீங்கள் பாலைநிலத்திலுள்ள தனிமையான ஓர் இடத்திற்குச் சென்று சற்று ஓய்வெடுங்கள்" என இயேசு கூறிய வார்த்தைகளை சுட்டிக்காட்டிய திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், பல விடயங்களில் நம்மை இழந்து, ஓய்வைக் குறித்து நாம் கவலையின்றி இருப்பதால் வரும் ஆபத்து பற்றி இயேசு இங்கு நமக்கு சொல்லித்தருகிறார் என்று கூறினார்.

திருஅவையிலும் இது பலவேளைகளில் இடம்பெறுகிறது, எல்லாமே நாம்தான் என்றெண்ணி, ஓய்வேயின்றி, ஓடிக்கொண்டிருக்கும்போது, இயேசுவைக் குறித்துக் கவலைப்படாமல் அவரையே மறந்துவிடும் ஆபத்து உள்ளது என்றுரைத்த திருத்தந்தை, ஓய்வெடுப்பது உடலுக்கு மட்டுமல்ல, இதயத்திற்கும் தேவை என்பதையும் வலியுறுத்தி, அந்த ஓய்வு, அமைதியில் நம்மை செபத்தை நோக்கி அழைத்துச்செல்ல வேண்டும் என்பதையும் எடுத்துரைத்தார்.

நாம் தினசரி பணிகளிலிருந்து ஓய்வெடுத்து மற்றவர்கள் குறித்து நம் பார்வையை திருப்பவும், மனதிற்குள் மௌனச் சூழல்களை வளர்க்கவும், இயற்கை குறித்து தியானிக்கவும், இறைவனுடன் கொண்டுள்ள உரையாடலில் நம்மை புதுப்பிக்கவும், தன் செயல் வழியாகவும் நமக்குக் கற்றுத்தரும் இயேசு, மற்றவர் மீது இரக்கத்துடன் செயல்படவேண்டிய வாழ்க்கை பாடத்தையும் நமக்கு சொல்லித்தருகிறார் என்றார் திருத்தந்தை பிரான்சிஸ்.

உண்மையாகவே ஓய்வெடுப்பது என்ன என்பது குறித்து நாம் கற்றுக்கொள்ளும்போது, நாம் இரக்கமுடையவர்களாகவும் மாறுகிறோம், ஏனெனில், ஓய்வுநேரத்தில், நாம், இறைவனுடன் கொள்ளும் தொடர்பில், நம் உணர்வுகள் மரத்துப்போகாமல், உயிர்துடிப்புடையதாக மாறி, ஓய்வு, ஆழ்ந்த தியானம், மற்றும் இரக்கம் நிறைந்ததாக மாறுகிறோம் எனவும் கூறினார்.

(நன்றி- வத்திக்கான் இணையம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org